## அரசு உயர்நிலை மற்றம் மேல்நிலை பள்ளிகளில் பனிபுரியும் காவலர்களுக்கு 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்குதல் – அரசாணை

பள்ளி கல்வித் துறை – அரசு உயர்நிலை மற்றம் மேல்நிலை பள்ளிகளில் பனிபுரியும் காவலர்களை விடுமுறையற்ற பணியாளர்களாக அறிவித்து விடுமுறைக் காலத்தினை கணக்கில் எடுத்துக் கொண்டு ஆண்டிற்கு 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

அரசாணை (நிலை ) எண் 181 நாள் 14–11–2014

**பார்வை :** பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 55931 /அ5/இ1/2014 நாள் 24–07–2014

**ஆணை**

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் 2014–2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் காவலர்களுக்கு விடுமுறைக் காலத்தினைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஈட்டிய விடுப்பு வழங்குதல்

2. மேற்காணும் அறிவிப்பின்அடிப்படையில் பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 522 கல்வி அறவியல் மற்றும் தொழில் நுட்ப(இ2) த்துறை 06–08–1996 ன்படி உயர்நிலை மேநிலைப்பள்ளிகளில் உள்ள இரவு காவலர் பணியிடத்தினை கோடைவிடுமுறை உள்ள பணிடமாகக் கருதபப்பட்டு அவர்களுக்கு ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்று ஓராண்டிற்கு 17 நாட்கள் ஈட்டிய விடுப்பு அனுமக்கப்பட்டு வருகிறது. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் கோடை விடுமுறையின் போதும் நிர்வாக நலன் கருதி பள்ளிக்கு வருகை புரிய வேண்டும், எனவே, இவர்கள் விடுமுறையற்ற பணியாளர்களாகக் கருதப்படுகின்றனர். ஆனால் பள்ளி மற்றும் அங்கிருக்கும் தளவாடப் பொருள்களின் பாதுகாப்பு கருதி விடுமுறை நாட்களிலும் காவலர்கள் முழுநேரப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றார். எனவே, காவலர்களை விடுமுறையற்ற பணியாளர்களாக அறிவித்து விடுமுறைக் காலத்தினை ஈட்டிய விடுப்பினை 30 நாட்களாக உயர்த்தி வழங்கலாமெனவும் அதன் பொருட்டு அடிப்படை விதிகளில் உரிய திருத்தம் வெளியிடுமாறும் பள்ளிக் கல்வி இயகக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துரு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பள்ளிக் கல்வித்துறையில் அரசு உயர்நிலை மேல்லைப்பள்ளிகளில் பணிபுரியும் காவலர்களை கோடை விடுறையற்ற பணியாளர்களாக கருதி விடுமுறைக் காலத்தினை ஈட்டிய விடுப்பிற்கு கணகிட்டு தற்போது ஓராண்டிற்கு வழங்கப்படும் 17 நாட்கள் ஈட்டிய விடுப்பினை 30 நாட்களாக உயர்த்தி அனுமதிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. அதற்கு எதுவாக விடுப்பு அனுமதிக்கும் வகையில்

தமிழ்நாடு அடிப்படை விதி எண் **82**(a) கீழுள்ள அறிவுரை **3**(a)(ii) ல் உரிய திருத்தங்கள் அரசு பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை மூலம் தனியாக வெயிடப்படும்

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த.சபீதா

அரசு முதன்மைச் செயலாளர்